# தீ விபத்தின் பின்னர்: பாதுகாப்பாக வீட்டுக்குத் திரும்புதல்

சமூகத் தகவல்

காட்டுத்தீயில் எரிந்த வீடுகள், கொட்டாரங்கள், மற்றும் பிற கட்டடங்கள் அல்லது அமைப்புகள் சாத்தியமுள்ள ஆரோக்கியக் கேடுகள் பலவற்றை ஏற்படுத்தலாம், இக்கேடுகளில் விழுந்திருக்கும் பொருட்கள், கூரான பொருட்கள், கனிந்து எரிகின்ற கரிகள், சேதமடைந்துள்ள மின்சாரக் கம்பிகள், கசிகின்ற வாயுக்கள் மற்றும் பலவீனமடைந்துள்ள சுவர்கள் போன்றவை அடங்கலாம்.

தீ விபத்தின் பின்னர் அறிந்துவைத்திருக்க வேண்டிய தீங்கிழைக்கும் பொருட்களில் அடங்குபவை:

- அஸ்பெஸ்ரொஸ்
- சாம்பல், முக்கியமாக எரிந்துபோன வேறு பொருட்கள் சேர்க்கப்பட்ட மரங்களிலிருந்து வருவது (கொப்பர் குரோம் ஆர்சனேற் அல்லது 'CCA' போன்ற)
- தூசி
- தோட்டம் அல்லது பண்ணை இரசாயனப் பொருட்கள்
- LP காஸ் சிலிண்டர்கள்
- மருந்துகள்
- எரிந்துபோன வீட்டு உபயோகப்பொருட்களிலிருந்து உலோக மற்றும் பிற எச்சங்கள்
- ஏனைய பொதுவான இரசாயனப் பொருட்கள் (உதாரணமாக, சுத்தம் செய்யும் பொருட்கள்)

உங்களுடைய சொத்திற்குத் திரும்பி வருவது பாதுகாப்பானதா என்று உங்களுடைய உள்ளூர் அவசரநிலைச் சேவைகளிடம் சரிபார்க்கவும். சாத்தியமான போது, தீயால் சேதமாக்கப்பட்ட சொத்துகளுக்குள் சிறுவர்களை அழைத்துச் செல்வதை தவிர்க்க முயற்சி செய்யுங்கள். அவர்களைக் கூட்டிச் சென்றால், எல்லா நேரங்களிலும் அவர்கள் பாதுகாப்பாகவே இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவும்.

## உங்களைப் பாதுகாக்கவும்

பாதுகாப்பு ஆடைகளை அணியுங்கள், இவற்றில் அடங்குபவை:

- வலிமையான காலணி மற்றும் கனரகப் பணிக்கான கையுறைகள்
- பாவித்த பின்னர் வீசக்கூடிய உடலை முழுதும் மூடும் ஆடைகள் (நீண்ட கைகளுள்ளவை மற்றும் ட்ரவுசர்கள்)
- P2 முக மூடிகள்.

உங்களுடைய உள்ளூராட்சிச் சபை அல்லது அவசரநிலை மீட்பு மையத்தின் வழியாக பாதுகாப்பான உடலை முழுதும் மூடும் ஆடைகள், கையுறைகள் மற்றும் முக மூடிகளைக் கொண்ட தொகுப்பை வாங்கிக் கொள்ளலாம்.

வீட்டை விட்டு வெளியேறும் போது, உங்களுடைய கையுறைகள், உடலை முழுதும் மூடும் அடைகள் மற்றும் முக மூடிகள் முதலியவற்றை குப்பை போடும் பையில் போட்டு பொதி செய்துகொள்ளுங்கள். தொற்று ஏற்பட்ட உடை மற்றும் பொருட்களை அகற்றிய பிறகு, உங்களுடைய கைகளைக் கழுவுங்கள். உங்களுடைய சப்பாத்துகளை திரும்ப அணியும் முன்னர் அவற்றைச் சுத்தம் செய்யவும்.

## கழிவைக் கையாளுதல்

உங்கள் சொத்தைச் சூழ்ந்துள்ள சாம்பலைப் பரப்புவதோ அல்லது கலைப்பதோ பாதுகாப்பற்றதாகும், குறிப்பாக CCA-சேர்க்கப்பட்ட மரம் எரிந்திருந்தால். உங்கள் வீட்டில் அல்லது வேறு அமைப்புகளில் அஸ்பெஸ்ரொஸ் உள்ள பொருட்கள் சேதமாக்கப்பட்டால், அவை இப்போது தீங்கு விளைவிப்பவையாக இருக்கலாம்.

## உணவு

தீயால் சேதமாக்கப்பட்ட அல்லது வெப்பத்தால் பாதிக்கப்பட்ட சகல உணவையும் வீசி விட வேண்டும். இதில் அழுகக் கூடிய மற்றும் அழுக முடியாத உணவுகள் எல்லாமே அடங்கும், உதாரணமாக தகரங்கள் அல்லது பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுகள். குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்டிருக்கப்படும் அழுகக் கூடிய உணவுகள் மின் தடைகளுக்குப் பிறகு உண்ணுவதற்குப் பாதுகாப்பற்றவையாக இருக்கலாம்.

## தண்ணீர்த் தாங்கிகள்

காட்டுத்தீக்கள் பெருந்தொகையான புகையையும் சாம்பலையும் உருவாக்குகின்றன, உங்களுடைய தாங்கியின் தண்ணீர் குப்பை மற்றும் சாம்பல் அல்லது இறந்த விலங்குகளால் மாசுற்றதாக மாறலாம். தண்ணீரானது வழக்கத்திற்கு மாறான சுவையுடன், தோற்றத்துடன் அல்லது மணத்துடன் இருந்தால், அதைக் குடிக்கவோ விலங்குகளுக்குக் கொடுக்கவோ வேண்டாம்.

VICTORIA State Government
Health and Human Services

## மலக்கழிவுத் தாங்கிகள்

உங்களுடைய மலக்கழிவுத் தாங்கிகள் தீயில் பலவீனமாகிவிடலாம், எனவே அதன் மீது வாகனத்தைச் செலுத்த அல்லது நடக்கக் கூடாது. உங்களுடைய மலக்கழிவுத் தாங்கி உடைந்திருப்பதாகச் சந்தேகித்தால், அதைப் பரிசீலிப்பதற்கு அனுமதிப் பத்திரம் பெற்ற குழாய் பொருத்துபவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

## உங்களைப் பற்றிக் கவனமெடுங்கள்

பாதுகாப்புக் காரணங்களுக்காக, உங்களுடைய சொத்தில் குறைந்தளவு நேரத்தையே செலவிடுங்கள். இருந்தாலும், நீங்கள் அங்கு நீண்ட நேரம் இருந்தால், உங்களுடன் பின்வருபவற்றைக் கொண்டுசெல்ல மறக்காதீர்கள்:

- போத்தலில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர்
- உணவு (அழுகக் கூடிய உணவை எஸ்கி அல்லது குளிர்ப் பையில் இட்டு குளிராகவே வைத்திருக்க வேண்டும்)
- சன்ஸ்கிரீன்
- தொப்பி.

உங்களுடைய சொத்திற்குத் திரும்பி வருவது அழுத்தம் நிறைந்ததாகவும் சோர்வு ஏற்படுத்துவதாகவும் இருக்கலாம். உங்களில் நீங்களே கவனமெடுத்துக் கொள்வது முக்கியமாகும். நிபுணரின் ஆலோசனையும் ஆதரவுச் சேவைகளும் உங்களுடைய உள்ளூர் அரசாங்க நிவாரணம் மற்றும் மீட்பு மையத்தின் ஊடாகக் கிடைக்கின்றன.

அங்கீகரித்து, வெளியிட்டவர்: விக்ரோரிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne.
© விக்ரோரிய மாநிலம், Department of Health and Human Services, ∴பெப்ரவரி 2016.